
திருவானைக்கா

# அகிலாண்டநாயகி மாலை



க் கவிஞர் தலைமை மன்றம்
ரி விழாச் சிறப்பு வெளியீடு

71°
O:194MMBA
N85
163991

உ

திருவானைக்கா

# அகிலாண்ட நாயகி மாலை

(மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியது)

## நவராத்திரி விழாச் சிறப்பு வெளியீடு



இடம் : ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம், காஞ்சிபுரம்

நாள்: 20—10—1985

வெளியீடு: (குரோதன ஐப்பசி: 4)எண் 28

இந்து தமிழ்க் கவிஞர் மன்றம்

தலைமை நிலையம்

காஞ்சிபுரம் - 631 502



Sri Chandramouleeswaraya Namaha

Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha
His Holiness Sri Kanchi Komakoti Peetadhipathi

# Jagadguru Sri Sankaracharya Swamigal

**Srimatam : : Samasthanam,**
**Kancheepuram - 631 502**

Camp : Aurangbad Date : 3-10-[illegible] 5

பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் ஒன்றான திருவானைக் கோயிலில் குடிகொண்டுள்ள ஸ்ரீ ஜம்புனாதருடைய நாயகிக்கு அகிலாண்ட நாயகி என்று பெயர். மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை என்று 100 பாடல்களை பலபுராண கருத்துக்களையும் வைத்து பாடியுள்ளதை பார்த்து மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்த நூல் இந்து தமிழ் கவிஞர் மன்றத்தின் சார்பில் நவராத்திரி வெளியீடாக வெளியிடுவது கேட்டு சந்தோஷிக்கிறோம். இந்து தமிழ் கவிஞர் மன்றம் மேன்மேலும் இது போன்ற நல்ல பணிகளை செய்ய வேண்டுமென ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி

# இந்து தமிழ்க் கவிஞர் மன்றம்

## தலைமை நிலையம் காஞ்சிபுரம் - 631 502

# வெளியீட்டுரை

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் திருவுளக் கருணையினால் மன்றம் ஆண்டு தோறும் நவராத்திரி விழாவையொட்டி ஓர் அருள் நூல் வெளியிட்டு வருகின்றது. அம் முறைப்படி இவ்வாண்டு 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை' என்னும் தோத்திர நூலை வெளியிட ஸ்ரீ பெரியவர்கள் அனுக்கிரகம் புரிந்துள்ளார்கள்.

இந்நூலைப் பாடியுள்ள மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஓர் அருட்பெருங் கவிஞர்! சைவமும் தமிழும் தழைக்க அவர் பாடியுள்ள நூல்கள் பல. அவை சொல் நயமும் பொருள் நயமும் கற்பனை வளமும் செறிந்து தமிழ் நெஞ்சங்களுக்கு விருந்தளிப்பவை. அவற்றுள் தலபுராணங்களாகவும் தோத்திரங்களாகவும் உள்ள 40-க்கும் மேற்பட்ட அருள் நூல்களை அவர் தம் தலைமாணக்கராக விளங்கிய தமிழகத்தின் தவப்புதல்வர் தாக்ஷிணாத்திய கலாநிதி உ.வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

அத் தொகுப்பில் ஒன்றாக மிளிர்வது இப்பாமாலை!

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெரும் புகழுடன் விளங்கி வரும் தமிழ்க் கவிதை வளம் அதன் மரபு சிறிதும் குன்றாமல் இவ்வுலகில் பெருக வேண்டும் என்று தனிபெருங் கருணை கொண்டுள்ள ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் செஞ்சொற்கவிகளாகவுள்ள இப்பாமாலையை இந்நவராத்திரி நன்னாளில் வெளியிட அருள் பாவித்தார்கள். அவர்களின் அருளாணையின் வண்ணமே வழக்கம் போல் மன்றத்தின் இலவச வெளியீடாக இந் நூல் வெளியாகின்றது.

மேலும் இவ்வருள் நூல் புலவர்கட்குச் 'சிந்தாமணி' யாகவும் 'கற்பகத்தரு'வாகவும் அமைந்து அவரவர் அறிவின் முயற்சிக்கேற்ப இன்பம் நல்குவதாக இருப்பதால் பொருள் எழுதாமல் மூலச் செய்யுட்களாக மட்டுமே வெளியிடப்படுகின்றன. எனவே இதனைப் பெறுற புலவர்கள் இந்நோக்கங்களுக்கேற்ப இதன் பயனை அனுபவிப்பதோடு இத்தகு செழுங்கவிகளைப் படைப்பதிலும் முயற்சி செய்ய வேண்டுமென்று அன்புடன் வேண்டிக் கொண்டு இந்நற்பணிக்கு எம்மை ஆளாக்கி நன்னெறிப் படுத்தி வரும் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் திருவடிகட்கும் இந்நூல் வெளியீட்டு பணிக்கு நல்லாதரவு புரிந்துள்ள பெருமக்களுக்கும் பணிவார்ந்த வணக்கங்களைச் செலுத்துகின்றோம்.

காஞ்சிபுரம்
20.10.85

இங்ஙனம்
மன்றச்சார்பில்
புலவர் மா. வேங்கடேசன்

600 008
163991
O-,194MME,A
N85

சிவமயம்

# திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை

## செல்வ விநாயகர் துதி

திருவளர் கபோல மதப்பெருக் குண்டு
தெவிட்டுகார் வண்டினம் எழுந்து
மருவளர் செய்ய சாந்தினுள் மறைந்த
மத்தக மீதுதங் கிடுதல்,
கருவளர் மணிகள் பதித்தபொற் குடத்தின்
கவினவீற் றிருந்தருள் கொழிக்கும்
உருவளர் செல்வ விநாயகன் பொற்றாள்
உபயபங் கயம்முடிக் கணிவாம்.

## நூல்

பூமலி செய்ய பொலிமணித் தோடு
புதுவெயில் எறித்தும்உள் மலர்ந்த
தேமலி ஆம்பல் செய்யவாய் முளைத்த
சிறுநகை இளநிலா எறித்தும்,
மாமலி குழனின் றவர்முக மலர்கண்
வளந்தர முன்புவந் தருள்வாய்!
காமலி வானும் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 1

வடதிசை யவனும் சமழ்ப்புறக் கனகம்
வாய்ந்துதென் திசைநகத் தமரும்
குடமுனி யவனும் சமழ்ப்புறக் கல்வி
கூர்ந்துமிக் குயர்ந்தவர் பலரும்
தடமலர் புரைநின் முகத்திரு கடைக்கண்
சார்பொருங் குற்றவர் அன்றோ?
கடவுளர் மனம்புக் கமர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 2

விழிவிருந் துதவும் நின்திரு மணத்தில்
விமலனுர் கரமலர் மேற்கொண்(டு)
ஒழிவரு கருங்கல் மிசையுறும் நின்தாள்,
உற்றவென் கரமலர் மேற்கொண்(டு)
இழிவற அடியேன் மனக்கலின் இடத்தும்
இயைந்துறும் என்றுனைத் துதித்தேன்!
கழிநசை முனிவர் புகந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 3

அடுயனேன் கொடியன் என்றுமுன் வருதற்(கு)
அஞ்சினை என்னின்வெங் கூற்றம்
மடியமுன் உதைத்தான் துணையடைந் தேனும்
வருதி! மற் றதுநினக் கரிதோ?
நெடியவன் பிரமன் இந்திரன் முதலோர்
நித்தமும் தாழ்ந்துசூழ்ந் தேத்திக்
கடியவெவ் வினைதீர்ந் துயர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 4

'பாவிநீ ! நின்முன் வருவது தகாதென்
பரிசினுக்(கு)' என்பையேல், முன்னம்
ஆவிசூழ் மதுரை அக்துமா பாவி
ஆயினன் ஒருவன்முன் முக்கண்
கோவினே(டு) அடைந்த குணத்திநீ அலையோ?
குலவது மறந்தனை கொல்லோ!
காவியங் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 5

பண்டுநீ பெருமான் அருள்வழி புகலிப்
பாலனுக் களித்தனை ஞானம்!
அண்டுமற் றதனல் முழுப்புகழ் நினக்கே
ஆயதோ? இரங்குபு நீயே
தொண்டுகொண் டடியேற் களித்தனை யாயின்
தூயநிற் கேமுழுப் புகழாம்!
கண்டுநேர் மொழியார் பயில்திரு வானைக்
காவகி லாண்டநா யாகியே! 6

அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியுருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை முன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன் அதனல்

பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தனென் ெறுருபெயர் பெற்றுன்!
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 7

பெரும்புகழ் அமைந்த நின்பதி என்னும்
பிரணவ குஞ்சரம் நின்கை
அரும்புவில் கரும்பு விரும்புபு கவரும்
அடல்புரிந் தென்றுளம் குறித்தோ,
வரும்புகர் முகங்கொள் அங்குச பாசம்
வயங்குற ஏந்தினை நாளும்
கரும்புயல் நிறத்தோன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 8

யான்என தென்னும் செருக்கிழந்தவர்மற்
றிழப்புறுர் நின்னை ஈ துண்மை
தானென மறைகள் முழங்கவும் உணராச்
சழக்கனேன் நினையிழந் துழல்வேன்!
மீனென வயங்கும் கண்ணினுய் கொடியேன்
வினைக்குமோர் இறுதியுண் டாங்கொல்?
கானென வரம்பை சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 9

விழியிடந் தப்பி மகவரிந் தூட்டி
விருப்புறு தந்தைதாள் தடிந்து
பழியகல் மனையை உதவிமற் றின்னும்
பலசெயற் கரியசெய் தார்க்கே
மொழியும்நின் கொழுநன் அருள்செய்வான்; என்னல்
முடிதரா தென்றுனை அடைந்தேன்!
கழியுணர் வுடையார் வாழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 10

வழிபடும் அடியர் ஆயினுர் தமக்கே
வழங்குதும் கருணை, வேருய
பழிபடு மவர்க்கு வழங்குறும் என்னில்
பயோதர மருதமு னன்றிப்
பொழிசுவை நறுநீர் புல்லுவர் நிலத்தும்
பொழியுமே புண்ணியப் பொருளே!
கழிதலில் தென்னங் காத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 11

கொடியவன் இவற்கும் அருள்புரி என்றுன்
கொழுநனுக் கெனைக்குறித் துணர்த்த
முடிவிலின் னருளால் எண்ணினை யேல் அம்
முதல்வன்நின் ஊடலை உணர்த்த
அடிபணி பொழுதில் உணர்த்திடல் வேண்டும்!
அஃதுடன் பலிக்கும்நீ அறிதி!
கடிதலில் கழகம் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 12

தாவரும் சிருக்கு மணிவடம் சங்கு
சக்கரம் சூற்படை இலைவேல்
ஓவரும் சிறப்பின் வேறுவே றேந்தும்
உண்மையால் ஒண்மல ரோன்முன்
மூவரும் இயற்று மூவகைத் தொழிற்கும்
மூலம்நீ என்பது தெரிந்தேன்!
காவரு மலர்நல் கிடுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 13

தாயினைக் கொன்றும் தந்தையைக் கொன்றும்
தவலரு மனைவியைக் கொன்றும்
சேயினைக் கொன்றும் கடும்பினைக் கொன்றும்
சேர்ந்தவர்க் கருள்வன்நின் கொழுநன்
வீயினைப் பொருவும் பதமடைந்தார்க்கே
விருப்பில்நீ அருள்வதோர்ந் தடைந்தேன்!
காயினைச் சுமந்த பொழில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 14

குற்றியை அடைந்த பசும்புலை உழுநர்
கொடியவன் நாஞ்சில் என் செயுமப்
பெற்றியின் நின்னை அடைந்தநா யேனைப்
பிறையெயிற் றந்தகன் கரத்துப்
பற்றிய தண்டப் படைசெயல் என்னே?
பரவிய கருணைவா ரிதியே!
கற்றிணி மதில்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 15

முடிமிசை யொருமந் தாகினி வாழ
முதல்வன்வைத் திடுதலிற் சிறந்த
கொடியவள் என்று யார்நினைப்பவர்கா
கோதரம் எருக்கெலும் பாதி

படிதரும் இடத்திற் சற்றிடம் உடம்பிற்
பாதியோ விடமருள் தாயே!
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 16

பெருவளன் அமைந்த நீருரு வாய
பெருந்தகை நீருரு வாய
ஒருகுல மகளை மலர்மிசைத் தேவும்
உணர்தராக் காட்டிடை மறைத்தான்!
அருகுநுண் ணிடைநிற் கஞ்சியே; அன்றே!
அணியுருப் பாதிமற் றிலையோ?
கருமுகில் தவழும் மதில்திரு வானைக்
காவகி லாண்டநாயகியே! 17

அலையடி யடைந்த அகத்தடி நிலையா[து]
அலையடி யேற்கிரங் குபுபுன்
தலையடி சூட்டிப் பிடியடி என்பான்
தடியடி விலக்கியாள்; இமய
மலையடி யுதித்து வளர்ந்துவெண் ணாவல்
மரத்தடி வாழ்பவற் புணர்ந்தாய்!
கலையடி உணர்ந்தார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 18

இருவினைச் சிமிழ்ப்புண்(டு) உழல்கொடி யவன்மற்
றிவற்கருள் என்றிரங் குபுநின்
ஒருமுத லவனுக்(கு) உணர்த்துதி! வருத்தம்
உன்னல்உன் பரிசினுக் கடாது!
வருபசுங் குழவிக்(கு) உறுபிணி தீர்க்கும்
மருந்தனை அன்றியார் நுகர்வார்?
கருமுகில் உறங்கும் மதில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 19

எடுப்பது பிச்சை, ஏந்துவ தோடாங்(கு)
இயக்குவ(து) ஒற்றையே(று) அரைக்கண்
உடுப்பது புன்தோல் மற்றிவர் மனையாய்
உற்றநீ உயிர்வயிற் றழலாய்
அடுப்பது தவிர ஊட்டுதல் ஆதி
அறமெலாம் வளர்ப்பை! ஈதழகே!
கடுப்பது தவிர்ந்த மதில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 20

முற்றவம் புரிந்து முழுமலந் துமித்த
மோனமெய்ஞ் ஞானிய ரன்றி
மற்றவர் கவரப் படுங்கொல்நின் கருணை?
வானகத் தெழுமதிக் கதிரை
நற்றவம் புரிந்த சகோரமோ? கொடிய
நவில்கருங் காகமோ கவரும்?
கற்றவர் புகழ்ந்து சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 21

தொண்(டு)அவாய், மனம்ஆ திகள்ஒருங் குய்க்கும்
தூயவர் அன்றிமற் றோரும்
அண்டர்ஆ தியரும் அணுகரும் நின்தாள்
அடைவரோ? அளவறு மேன்மை
கொண்டவான் கங்கை அடைவ(து ஓதிமமோ?
குரண்டமோ? குணப்பெருங் குன்றே?
கண்டவர் பவங்கா ணுத்திரு வானைக்
காவகி லாண்டநாயகியே! 22

இடையரு அன்பின் மெய்கொடு துதிப்பார்
இன்துதி முன்னர்மெய்ந் நிழல்போல்
புடையரு வினையேன் பொய்கொடு துதிக்கும்
புன்துதி எங்ஙனம் என்னின்
அடையருத் தேமாங் குயில்குரல் எதிர்ஓர்
அரிட்டமும் கதறுதல் பொருவும்!
கடையரு மருதம் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 23

மறைபல துதிக்கும் நின்பெரும் புகழை
வழத்திய ஆன்றவர் நாவும்
அறையுமோ, மற்றைப் புல்லிய தெய்வத்
தமைபுகழ்? அறையுமேல், இனிமை
நிறைதரு கருப்பஞ் சாறவா வியநா?
நிம்பநெய் அவாவுதல் போலும்!
கறையறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 24

மனைதொறும் இரப்புத் தொழில்கொடு புகுவார்
மறலிதன் ஆலயம் புகுவார்
நினைதர முடியாக் கருக்குழி பலவும்
நிரம்புற ஓடுபு புகுவார்

இணையவர் புகாநின் திருப்பெருங் கோயில்
ஏழையேன் புகஅருள் புரிவாய்!
கணைகடல் வாவி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 25

எண்ணருங் கொடிய பாதகம் பலவும்
இயற்றுமா பாவியான் எனினும்
நண்ணரும் நினது திருவருள் தோயின்
நண்ணுதல் அரிதுகொல் புனிதம்?
பண்ணருங் கொலைசெய், வாளும்பொன்னாமே
பரிசன வேதிதீண் டுதலால்!
கண்ணருங் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 26

முழுவதும் குணமே நாடில்முற் றாது
முகுந்தன் ஆதியரிடத் தினும், நீ
பழுதற வுணர்த்தா விடின்உணர் வாரோ?
பரமனைப் பண்டவர் புரிதோம்
எழுதரிது அவரும் இன்னரேல், அம்ம
என்செயல் யாதெனப் புகல்கேன்!
கழுவிய மணியில் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 27

உலகிடை அழுத பிள்ளைபால் குடிக்கும்
உண்மையென் றுரைப்பதற் கேற்ப
இலகுசீ காழிமழவுஅழ அளித்தாய்
இன்முலைப் பால். அழா விடினும்
அலகற இரங்கி அளிப்பவர் இலையோ?
அத்தகு மழவுயான் அருள்வாய்!
கலகமில் கழகம் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 28

அழும்மழ(வு) ஒன்றற் களித்தனன் தீம்பால்
அம்பலத் தாடிய பெருமான்!
பழுதற நீயும் அளித்தனை தீம்பால்
பசித்தழும் இளம்மழவு ஒன்றற்(கு)!
எழுதரும் இவற்றால் நினைக்குறு புகழ்போல்
எம்பிராற்(கு) உண்டுகொல்? இயம்பாய்!
கழுமணிச் சிகரி பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 29

இடையரு அன்பு பெருக்கிநீ பூசை
இயற்றிட இனிதுளம் உவந்து
சடையரு முடியோன் உறைதரப் பெற்ற
தண்ணிழல் நாவலம் தருவோ?
புடையரு(து) அமரர் உறைதரப் பெற்ற
பொலந்தருவோ,,சிறந் ததுு! கண்
கடையருக் கருணை யாய்! திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 30

சிறுபிறைக் கொழுந்து வீற்றிருத் தலினல்
தேவதே வன்திரு முடிமேல்
மறுவில்அச் சுவடு பொலிதரும் ஐயம்
மருவுரு(து) அஃதுமற் றெவர்க்கும்!
உறும் மறைக்(கு) அரிய நின்னடி அகத்தும்
ஒளிரும்அச் சுவடு!கா ரணம்என்?
கறுவொழித் துரைப்பாய்! புகழ்த் திருவானைக்
காவகி லாண்டநா யகியே! 31

எதிர்மலர் தொடுத்த மாரவேள் உடலம்
எரிக்குண வாக்கிய பெருமான்
அதிர்வரு மெய்யில் பாதிநீ கவர்ந்தாய்;
அமைதர முழுவதும் கவர்ந்தால்
உதிர்தலில் நினது திறமையார் உணர்வார்?
ஓங்(கு) அவன் வியாப்பியப் படலால்!
கதிர்படு மிதுவே யருள்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 32

தவவலி உடையோர் பலரையும் மயக்கிச்
சடைமுடி யோன்எதிர் மயங்கி,
இவரும்அம் மயக்கால் புணர்ந்தொரு மகவும்
ஈன்றமால் மோகினி, தனித்துப்
பவர்படர் வனம்புக் குறைதல், மற்(று) அவன் மெய்ப்
பாதிநீ கவர்ந்ததோர்ந்(து) அன்றே?
கவலரும் வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 33

நீயெனப் பெருமான் விரும்பியோர் தினத்து
நிகழ்தரப் பொலிவதும், புவிக்குத்
தாயெனப் படும்நீ அவனெனப் பொலியும்
தன்மையும் வேறலேம் என்று

சேயெனப் படுபல் உயிர்க்கெலாம் உண்மை
தெரிப்பது போலும். ஈதருளே!
காயெனப் பவமுற் றகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 34

பரவுநம் கருணை வான்தவம் உடையார்
பால்அலால், புன்மையோர் பாலும்
விரவுமோ? என்னின் எழுபெரு வெள்ளம்
விரிதரு வாரிதி மட்டோ?
உரவுதீர் உறவி அளையினும் புகுமே
உவமையில் கோமளக் கொழுந்தே!
கரவுதீர் முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 35

சடையெனும் வனத்து வாழ்தரும் கங்கை
தனித்துறை வாள்கொல்என் றெண்ணி
விடைமிசைப் பெருமான் அவள்உயிர் வாழ்வான்
மிலைந்தனன் கொன்றையாங் (கு) அன்னப்
பெடையன நடையாய்! அனையவன் தனைநீ –
பித்தன்என் றெண்ணுதல் பிழையே!
கடையுரு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 36

பரவுறும் உலகத் துயிரெலாம் ஈன்று
பரவரல் அவையுரு தோங்க
உரவுறு கருணை யால்வளர்த் திடும்நீ
ஒருமலை மகள்என உதித்து
விரவுறு புறவு கிளிமயில் பூவை
விரும்புபு வளர்த்தவா றென்னே?
கரவுறும் ஆவர்கா ணுத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 37

பரிதிவந் துதயம் எழமுறுக்(கு) உடையும்
பங்கய மலர்மீசை உறைவார்
அரிமறு மார்பும் அயன்திரு நாவும்
அமர்பவர் என்பர்; நின் முகமாம்
விரிமலர் கமலத்(து) உறைவரென் றுணரார்!
மேதினி மடமைஎன் சொல்கேன்?
கரிசறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 38

விரும்புநின் செங்கை தாங்கலால் இரண்டாம்
வேற்றுமை விரித்துரை செய்யா(து)
அரும்புதா மரைதாங் குவாரென லால்மூன்
ருவதும் படுசொ லும் விரிக்கும்
பெரும்புவி மலர்பூ மாதெனும் பெயர்கள்
பெரும்வினைத் தொகைகுணத் தொகைப்பேர்
கரும்புபைங் கமுகில் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 39

நந்திய அறியா மையின்நினைத் துதிப்பேன்
நாயினேன் ஆயினும் அதனல்
முந்திய வினைமுற் றெழிதரா(து) உறையும்
முறைமைஎன்? மறவியி னேனும்
உந்திய அழலைத் தொடின்சுடா துறுங்கொல்?
ஒழிவருங் கருணைவா ரிதியே!
கந்திதென் பொருவப் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 40

அங்கையேந் துறுபைங் கிள்ளையின் மொழியோ?
அறுமுகக் குழவிவாய் மொழியோ?
சங்கையே குழையாக் கொண்டவன் ஊடல்
தணித்திடப் புகலுமின் மொழியோ?
மங்கைநின் செவிக்கு நாயினேன் புன்சொல்!
மற்றுநீ இரங்கல்எவ் வாறே?
கங்கைதாழ் பொன்னி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 41

ஒப்பில்நின் புகழே கேட்களன் செவிகண்
ஓங்குகின் உருவமே காணத்
தப்பில்நின் தனையே பாடிட வாய்; கை
தவாதுநின் னடிப்பணி யாற்ற!
இப்படி உறுமேல் செங்கதிர் உதயம்
எத்திசை எழினும்மற் றென்னே?
கப்பிணர்த்தருக்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 42

ஓதுறு முறைமை யொன்றின்முன் மூன்றுள்
ஒருசிறியேற்குநின் பதிக்கும்
போதுறு குழல்நீ நடுப்பொலி தலினல்
புரிந்துநின் பதியொடும் எனைப்பின்

தீதுறும் இரண்டின் நீக்கியொன் ருக்கும்
திறன்நினக்கு(கு) அன்றியார்க் குளது?
காதுறு கண்ணூர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 43

கோவணம் மறையாக் கொண்டனன் பெருமான்!
கொண்டனை நீயுமே கலையாத்
தூவண வவன்மா தேவன்மா தேவி
துதிக்கும்நீ எனில்திரு நெடுமால்
ஏவண அவற்கு நீவியாப் பியமஎன்(று)
இசைப்பதெங் ஙனும்அருள் தாயே!
காவண மறுகு மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 44

பொறியரி தொடரும் மருமலர்த் தாளோன்,
பொலியனம் தொடர்சடா முடியோன்
அறியும்நின் கொழுநன், பொறியரி தொடரும்
மலர்க்குழ லினை, நடை அன்னம்
செறிதரத் தொடர்மென் பதத்தினை, எனில்நீ
தேவொடு மாறுளாய் கொல்லோ?
கறிபயில் அளிசூழ் பொழில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 45

திருந்துறு தந்தை ஆகிய வரையைத்
திரிபுரம் எரித்தநாள் குழைத்த
பெருந்திறல் உணர்ந்தம் மலைஉளம் மகிழப்
பெருந்தகை நிறம்முலைக் கோட்டால்
பொருந்துறக் குழைத்தாய் போலும்! நின் திறமை
புகலுதற் கடங்குமோ? தாயே!
கருந்துழாய் மார்பன் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 46

மறைமுதல் பொருவ ஏந்தினை நீயும்
மலர்புரை தருகையில் வன்னி
உறைதரும் அனையான் நிறமும்நின் னிறமும்
ஒத்தன ஆயினும் அவன(து)
அறைதரும் எழுநா வதுநின தொருநா
வதுசெவி யவாமொழி யதுதான்
கறையற வெதுநீ புகல்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 47



163991

O-,194MME,A
N85

குடகடல் ஒடுங்கும் இரவி,தண் மதியம்
குணகடல் உதிக்கும் என் றுரைக்கும்
பரவர(வு) ஏந்தும் உலகம்,நின் ஒருகைப்
பங்கயத் தொடுங்கும் நின் கொழுநன்
தடமலர் வதனத்(து) உதிக்கும்என் றுணராத்
தன்மைஎன்? மென்மைசால் மயிலே!
கடவுளர் பலரும் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 48

பெருவழக் கெடுத்துப் பேரவை ஏறிப்
பேசுவ குறையறப் பேசி
ஒருதிரு நாவலூரனை ஆண்டான்,
ஓங்குவெண் ணுவலூர் அண்ணல்!
அருளொடு நீயும் அத்தகு செயலொன்(று)
ஆற்றின்நன்(று) என்றுயான் நினைந்தேன்
கருளற ஒளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 49

முதுபுகழ் உடைநின் பதியிரு பாத
முழுமலர்க்(கு) அருச்சனை யாற்றின்
மதுமலர் ஒன்று குறையினும் அதற்கு
மாறுகண் இடந்(து) இடல் வேண்டும்!
அது செய மாயோன் அல்லன்யான். நின்பொன்
அடிஅருச் சனைசெய்வான் புகுந்தேன்!
கதுமென அருள்செய்(து) அருள்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 50

தருமம்என் றுரைக்கும் அளியமர் நின்கைத்
தாமரை மலரின(து) அலர்ச்சி,
பெருமதி மலர்ச்சி மாற்றும்என் றுரையார்!
பெருமதி மலர்ச்சியே செழித்த
மருமலி கமல மலரின தலர்ச்சி
மாற்றும்என் றுரைப்பர்.ஈ தென்னே!
கருணையிங் கடலே! அருள்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 51

நீவினை தத்தால் நின்பதி முகக்கண்
நிகழ்கைசேர்த் தெடுத்திடும் காலம்,
ஓவியம் அனையாய்! கணமும்இன்(று) உனக்கஃ(து)
உம்பர்ஆ தியல்ல உயிர்க்கும்

ஏவியகோடி யுகம்பல வாம் அவ்
விநோதம்நீ ஆற்றுதல் தகாது
காவியங் கண்ணூர் பயில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 52

தென்னவன் புரிந்த பெருந்தவப் பேற்றால்
செழுந்தழல் அகத்தொரு மகவே
அன்னநீ உதித்த வாஞ்சை உள்குறித்தே
இறைநுதற் கண்புதை யாது
மன்னமற் றிருகண் புதைத்தனை! நின்னை
மதிக்குலம் என்ப(து) ஓர்ந் திலையோ?
கன்னவில் தோளார் பயில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 53

அரும்புமேர் நின்கைக்(கு) அணிபல அணிந்துள்
அவாவொடு தாங்குமா தர்களை
விரும்புபு சுமக்கும் மெல்லிதழ்க் கமலம்
மெய்த்தவம் உடையன எனவே
இரும்புவி புகன்றால் அனையமா தர்கள்தம்
இருந்தவப் பெருமைஎன் புகல்கேன்?
கரும்புநேர் மொழியார் பயிர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே ! 54

சிலம்பகத் பதுதித்த நின்னடி தற்சூழ்
சிலம்பகத் துதித்தமா தரைவல்
வலம்பகப் பொலியும் முலையினாய்! அங்கை
மலரகத் துதித்த மா தென்ன
உலம்பகப் பொருதோ ளான்முடிக் கொளாமை
உணர்ந்தன்றோ ஊடலில் தாக்கும்
கலம்பக முலைமுற் புனைதிருவா னைக்
காவகி லாண்ட நா யகியே! 55

பெரியவர்க் கிடுக்கண் புரிவதை உணர்ந்து
பெரும் புகழ்த் தந்தைதன் மரபென் (று),
அரியவர் சிந்தை ஆலயம் புகுவாய்!
அயர்ந்தும்எண் ணாமல் வண்குறிஞ்சிக் (கு)
உரியவன் கரத்துப் புகூஉக்குரு குப்பேர்
ஒருவரை கொன்றவனை அழகே!
கரியவன் பிரமன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 56

நினைஉணர் மகள்தாய் மரபென ஒருமான்
நெடுங்கையேந் தினன்பெம்மான்; அம்மான்
தனைஉணர் மகன்தாய் மரபெனக் கிள்ளை
தன்னைநின் கையில்ஏந் தினையால்!
வினையுண—ரார்சொல் நீயும்நின் பதியும்
விரும்புறும் ஆடவென் உரைக்கேன்?
கனையுணர் அளிசூழ் பொழில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 57

பொலிதரப் பசந்து நீர்மழை எங்கும்
பொழியுமே புயலது போல்
மலிதரப் பசந்து நீயும்வண் கருணை
மழைபொழி குவை கொடு வினையால்;
மெலிதரலுற்ற எனைஒழித் திடுவான்
விதியெவன் விமலமெய்ச் சுடரே!
கலிதரு துயர்சா ராத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 58

நறையிலா மலரோ? நயமிலா மொழியோ?
நயனமில் லாதவாள் முகமோ?
பொறையிலாத் தவமோ? மகவிலா மனையோ?
புனலிலா ஓடையோ? நீதி
முனையிலா அரசோ? மதியிலா இரவோ?
மூடனேன் பத்தியில் பாடல்!
கறையிலா வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 59

குணமிலேன் மொழிபா நயமில தெனினும்
குறித்ததை ஏற்றருள் செய்ய
இணர்மலி குழால்! நிற் கேதகும் சிலம்பீ
இயற்றும் நூற் பந்தரும் உவந்து
புணர் அருள் புரிந்தான் நின்பதி அந்தப்
புராணம்நீ ஓர்ந்தனை அன்றே!
கணம்மலி முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 60

வரிவிழிக் குடைந்த மானையும் நுதற்கு
மானுருப் பிறையையும் அல்குற்(கு)
இரிதரும் படவெவ் வரவையும் மருங்குற்(கு)
இணைதராத் துடியையும் சுமந்தான்!

துரிசறு வனப்பார் நின்னுறுப் பினுக்குத்
தோற்றறும் விசேடம்என் றுணர்ந்தே!
கரியகண் டத்தோன் அருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 61

பொறை அருள் அடக்கம் அன்பு உபசாரம்
பொலியும் ஆ சாரம்நல் வாய்மை
அறைதரும் இன்ன குறையுளேன் எனினும்
அடிமையேன் நினக்குயான். உறுப்புக்
குறையுடை யாரும் மக்கள்என் றெடுத்துக்
கூறுவர் உலகர்நீ உணர்வாய்!
கறையற விளங்கும் அருட்டிருவானைக்
காவகி லாண்டநா யகியே! 62

உரைசெய்வெண் ணாவல் நிழலுறை பெருமான்
ஓங்கருள் முறைசெலுத் தியகோன்
விரைசெய்பூங் கொன்றை யவனென நீயும்
விருப்பொடு செலுத்திடல் வேண்டும்!
புரைசெய்என் பாலே மற்றது செலுத்தின்
பொருப்பின்மேல் இடுசுடர் போலாம்!
கரைசெயா வளங்கள் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 63

புண்ணிய வெள்ளை நாவலோன் ஆரம்
பூண்டவன் எனும் பெயர் புனைந்தான்!
தண்ணிய குணத்து நீயும்என் பாடல்
தழுவுபு பூணுவை யாயின்
அண்ணிய பாடல் பூண்டவள் எனும் ஓர்
அரும்பெயர் நினக்கும்உண் டாமே'
கண்ணிய வரங்கள் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 64

தழைசெய்வெண் ணாவல் நறுநிழல் உறைவான்
தனிமுதல வன்ஒரு பாகத்
துழைசெய்ஒள் விழியாய் உறைகுவை! நீ, மற்(று)
உன்னடி நிழலில்எஞ் ஞான்றும்
விழைசெய் யான்உறையப் புரிந்திடின் அதனல்
மிக்கபுண் ணியம்நினக் குண்டே!
கழைசெய்பூங் கழனி பொலிதிருவானைக்
காவகி லாண்டநா யகியே! 65

பிரம்படி பட்டிம் கல்லடி ஏற்றும்
பிறைபொரு வில்லடி கொண்டும்
நிரம்புற அருள்வான் ஓங்குவெண் ணுவள்
நிழல் உறை பவன்; அடியார் பால்
உரம்பயில் அவன்போல் நீ அவ்வா றேற்றின்பு
உதவுநள் அல்லள், மெல் லியல்நீ,
காம்பறு கழனி மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 66

பற்பலர் அறியப் பித்தன் என்(று) எள்ளிப்
பனவ, போ' என்றுளார் த்மையும்
பொற்பலர் பெருமான் விடாம் என ஆண்டு
புரந்தனன்! அங்ஙனம் இன்றி
வெற்பலர் மருந்தே! துதித்து 'வா' என்னும்
வினையினேன் தனைவிட விதிஎன்?
கற்பலர் நந்த வனத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 67

தேவியோ(டு) இனிது வந்தருள் புரிந்தான்
சிவன், அடி யார்க்கென்ப தன்றி
'ஆவிநேர் கொழுந ஞேடுவந் தாண்டாள்
அம்மை' என்பார் இலை அன்னே!
மேவியச் சீர்த்தி நினக்குறு விதம் என்?
விளம்பிட வேண்டும்நா யேற்கு!
காவியார் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 68

அடியவர் குறிப்போர்ந்(து) ஆண்பனை காய்க்க,
ஆற்றெதிர் செல்ல ஏ(டு) என்பின்
பொடிமட வரலா சக்கராம் விழுங்கும்
பொருள்தரச் செய்தனன் பரமன்!
கொடியனேன் குறிப்போர்ந்(து) உன்னடிக் கன்பு
கொளப்புரி வதும் உனக்(கு) அரிதோ?
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 69

அயன் அரி குலிசன் அமரர்உள் நடுங்க
அடர்ந்தெழும் கொடுவிடம் வாங்கி
நயனம்மூன் றுடையான் உண்டனன் முன்னம்;
நங்கைநின் பவளவாய் அமிர்தப்

பயன் உணர்ந் தன்றே? அலன்எனில் அனைய
பரமன்எவ் வாறுணத் துணிவான்?
கயன் மலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 70

ஒளிமிகு சம்பு லிங்கநா யகர் போல்
உடையையால் நுதல்விழி நீயும்!
அளிமிகும் அனையார் மாரனை எரித்தார்,
யாரைநீ எரித்தனை அம்மா?
விளிமிகு நாயேன் வினையினை எரித்தால்
இரும்புகழ் அவரினும் நினைக்காம்!
களிமிகும் அமரர் சூழ்ந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 71

நெடுவலி கொடுமா மேருவில் பிடித்தாய்
நீ, அஃது உணர்குவன் யானும்!
அடுதிறல் சூலி பிடித்தனன் என்பார்
அவனியுள் சிலர் கருத் தென்னோ?
இடு(கு) இடை நீயும் அவனும் வேறல்லீர்
என்பதை உணர்ந்தனர் கொல்லோ
கடுவிழி மடவார் பயில் திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 72

'அம்பலத் தாட எடுத்ததாள் துணை' என் (று)
அறைவனோர் கால், மலை யரையன்
வம்பலர் மூன்றில் திருமணத் தம்மி
வைத்ததாள் துணை' என்பன் ஓர்கால்!
'செம்பொருள் துணியான்' என்றெனை இகழேல்:
தேர்ந்தொரு வழிநின் றேன் அன்னாய்!
கம்பலர்த் தடம்சூழ் தருதிரு வானைக்
காவகி யாண்டநா யகியே!

எதிரறு பொதுவில குறட்பிணர் வெரிந்மேல்
இயைத்திடத் தகாதென உணர்ந்து
முதிர் உணர் வுடைய பரன்மறைச் சிலம்பார்
மொய்வலத் தாள் நிறீஇ, இடத்தாள்
அதிர்வர வெடுத்தான்; வழுதி அவ்வருமை
அறிதரான் பிழைத்தனன் பொறுத்தாய்!
கதிரருட் கழகே அது; திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 74

பரவுவெண் ணுவல் நீழலோன் இடத்தாள்
பற்றிய என்முனம் குறுக
உரவுசெய் தண்டதரன்உளம் நடுங்கும்
உதைத்த (து) அத் தாள் என உன்னி!
விரவுமப் பதம்நின் பதமன்ருே? அதனை
மென்பதம் என்ப(து) என் விளம்பாய்?
கரவுருப் புலவர் புகழ்த்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே! 75

ஒருகருங் கேழல் உருவெடுத் திணையில்
உன்பதி அடிமலர் காண்பான்
பெருநிலம் அகழ்ந்த மாயவன், நினது
பிறங்குபேர் ஆலயம் சூழ்ந்த
பொருவில் நீ (று) இட்டான் மதிலடி கண்டால்
போதுமே, புண்ணியக் கொழுந்தே!
கருள் கடிந்து ஒளியின் மலிதிரு வானைக்
காவகிலாண்டநா யகியே! 76

உயன் மறந் (து) அடரும் திரிபுரம் சிதைப்பான்
ஒருவரை எளிதினில் குழைத்த
பயன்மதி முடித்த பாடல்சால் பெருமான்
பாழியம் தடநெடும் தோள்கள்
வியன்முலைக் கோட்டால் குழைத்தருள் நினக்கு
மெல்லியல் எனும் பெயர் தகுமோ?
கயன்மலர்த் தடங்கள் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 77

மையவாள் மகன்எள் எச்சிலுண்டாற்கு
மகிழ்ந்தருள் செய்துநின் கொழுநின்
மெய்யவாம் சீர்த்தி படைத்தனன்; எனக்கு
விரும்பிநீ அருளுவை யாயின்
ஐயபெண் மகன்எள் எச்சிலுண் டானுக்கு
அருளினுள் எனும்புகழ் நினக்காம்!
கையர்வந் (து) அணுகற் கருந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 78

புனல்பயில் தவளை முழங்கநின் கொழுநன்
புகழ்பெயர் உரைத்ததா உணர்ந்து
மினல்பயில் கனகம் வீகினன் ஒருவன்
மெய்ம்மையே நின்பெயர் உரைக்கும்

உனல்பயில் குழாம்பு கேன், தொழேன். புகழேன்
உவந்திடேன், எங்ஙனம் உய்வேன்?
கனல் பயில் மணிமா மதில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 79

மாவியல் மெருமான் மான்பிறை சுமந்தேன்
வாமபா கத்தினி தமரும்
நீவினை யாடற் கென்பனம் பற்க
நிகழுஃ திடைமரு தூலில்
மேவியோர் அரசில் விழுங்கிய தாதி
வெறுப்பன மறைப்பதற் கென்று
காவியங் கண்ணாய் உணர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 80

அண்டகோ டிகள்என்(று) உரைத்திடும் சிற்றில்
அமைத்தமைத் (து) ஆடிடு வாய்நீ!
துண்டவாள் மதியம் சூடிய சடிலச்
சுந்தரன் அழித்தழித் (து) ஆடும்!
பிண்ட நூல், என்றும் பேதை நீ அனையான்
பித்தன் ஏன் (று) உரைப்பது மெய்யே!
கண்டவாம் மொழியார் பயில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 81

மகள்என நினைந்து தாய்என விளித்த
மலையிறை மணையறி யாமை,
புகரறு பிரமன் முதற்பல உயிர்க்கும்
பொருந்துதா யாம்உனைக் கணேசன்
அகம் நகுமுருகக் கடவுள்தாய் என்று
நவில் அறியாமையை ஏய்க்கும்?
ககனமேல் ஓங்கும் மதில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே!

இலங்(கு) அறம் முப்பத்திரண்டென வகுத்தாங்(கு)
இகலற அவையெலாம் வளர்த்து
மலங்குயிர் பலவும் புரக்கும் நீ கொடியேன்
மாட்டருள் புரியின் அஃ(து) அவற்றுள்
துலங்கும்ஒன் றெடுசே ராதுகொல்? தனிப்பில்,
சொற்றிமுப் பத்துமூன்(று) என்றே!
கலங்கலில் வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 83

இளைத்தடைந் தேனை யாடியென்று னையான்
இரந்திரந்(து) ஏதத் நீ இரங்கி
வளைத்தபேர் அருளால் ஆருவ தனிலும்
மன்ற நீயே அருள் புரிந்தால்
முளைத்தசீர் பரவ விடமிலை கேட்டோ
முகில்மழை வழங்கிடும் தாயே!
களைத்தடம் சிகரி சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நா யகியே! 84

பிழைபல உடையேன் ஆயினும் அவற்றைப்
பேதைநீ என்பதற்கக்கிணங்
குழைமனத் தகற்றி ஆள்வே வேண்டும்!
கூர்ந்தினி(து) ஆண்டிடாய் என்னில்
மழைமலர்க் கூந்தல் கங்கையைப் புகழ்வேன்,
வைவரே நொந்தவர் தாயே!
கழைமலி கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நா யகியே! 85

சடைமிசை மாதை நோக்கி,யார் எனில் நீ
சங்கரன் நீரென்பான், முகமுன்
இடைதெரி தரல்என் என்னின்நோக் குறும்நின்
எழில்முக முதல்நிழல் என்பன்!
உடையநா யகிநீ மறுத்திடில் பிறரால்
உணரென்பான், உணரவல் லவர் யார்?
கடை யுறல் ஒழிந்த வளத்திரு வானைக்
காவகி லாண்ட நா யகியே! 86

எனக்கருள் செயின் நின் கொழுநனைப் புகழ்வேன்,
இமய நின் தந்தையைப் புகழ்வேன்,
மனக்கினி தாம் நின் மைந்தரைப் புகழுவேன்,
மலரின் நின் தோழியர்ப் புகழ்வேன்
நினக்கினி யவராம் அடியரைப் புகழ்வேன்,
நின்னையும் புகழ்வேன் தாயே!
கனக்கடி மதில்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்ட நா யகியே! 87

பூவண நகிரில் பொன்னனை யாள்இல்
புகுந்தனன் முன்புகா மாரி!
தூவண அன்பின் ஐந்திணை எனும்நூல்
சொற்றதை விளக்கினன் என்னில்

மாவணத் தளிர்நேர் மேனியாய்! உலக
மாதுகொல் நீ?விடை இதற்கென்?
காவண நிறை வீ தித்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! ௮௮

பேயொடு நடிக்கும் பித்தனே என்றே,
பெருங்கதி யிலிஇவன் என்றே,
தாயொடு தந்தை இல்லவன் என்றே,
தம்பிரான் ஒருதிரு மேனி
நீயொரு பாதி நின்முன்ஓர் பாதி
நிலவுறக் கொண்டது நன்றே!
காயொடு விரத்தென் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 89

மோகினி உருக்கொண்(டு) ஒருதரம் புணர்நின்
முன்னவன் தனக்குமோர் பாதி,
ஏசலில் எழில்நின் தனக்குமோர் பாதி
எம்பிரான் மேனியில் என்றால்
ஆகிய நீயே அவன்எனத் தெரிந்தேன்
அல்லைஎன் றால்பொறுப் பாயோ?
காகனம் சுமக்கும் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 90

பல் லக்கு ஈன்ற நின்திரு உதரப்
பால் உள(து) என்னும்நின் இடைநேர்
ஒல்லுமா(று) இலதா யினும் ஒரு பக்கம்
ஒத்தலின் சிருட்டியை ஆற்றும்
வெல்லுநா யகன்கைத் துடிஎனின் நின்றன்
மெல்வயிற் றிற்கது புகழோ?
கல்லுமா மலத்தார் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 91

வண்படு கருப்புச் சிலைகொடு நெடிய
வலிபடு மேருவிற் கொண்ட
தண்படு மதியம் சூடியைப் பொருது
சமயப்படு நகைபுரிந் துப்பாய்!
ஒண்படு வலர்க்குப் பசும்புல்வன் படையென்(று)
உரைப்பனை விளக்கினை தாயே!
கண்படு மனச்செய் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே!

தேவிநின் இடைதோள் ஒத்திரு குணத்தால்
சிதம்பர தலத்தும்வேய் வனத்தும்
மேவிய நகைமுத்(து) அணிமுலை ஒக்கும்
விதத்தினால் திருமுல்லை வாயில்
பாவிய கயிலை இடத்தும்வீற் றிருப்பன்
பரன் தலை மதியனே அன்றோ?
காவியன் ககனம் உறுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 93

சுவைபடு கனிசெய் பசைம்நெட் டரம்பை,
சூதம், ஆ மலகம், வெண் ணாவல்
இவைமுதற் பலவான் தருநிழல் உறைவான்
இனியநின் மொழிச்சுவை அவாவி
நவைபடு கொடிய வச்சிர வனமும்
நயந்தனன் பித்தனா தலினால்;
கவைபடு சூலி, எழில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 94

இறையவன் வாமத் துறையும்நீ, தொழில் செய்
இமையவர் தருப்பணம் காட்ட
மறைவில்மற்(று) அதனை நோக்கி அவ் விறைவன்
வலப்புறத் தொருமடக் கொடி நன்(கு)
உறைவதென்? என மற் றவனோடு பிணங்கேல்!
உற்றுநோக் கிடில்பிழை இல்லான்!
கறைமலி களத்தன் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 95

கொடியது பிறத்தல், அதனினும் அம்ம,
கொடியதே இறத்தல், இவ் விரண்டும்
தடிதர நினைந்தேன் தந்தைதாய் இல்லான்
தறுகண் வெங் கூற்றதைத் தாற்குன்
அடியன்என் றுணர்த்தி அருள்விலக் குவையேல்
அகிலமீ(து) ஒருகதி உண்டோ?
கடிமலர்த் தடங்கள் சூதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 96

தடியுணல் என்றும் வனசரர் பெருமான்
தருதடி மிசைந்தனன் ஒழிக !
மிடியிடை யவர்மால் என்றுநிற் களித்தான்
மேனியில் பாதி ஆதலினால்

படிவிதி விலக்கி லான்கரன் என்னைப்
பற்றியா டற்கவை குறியான்
கடிதரா துணர்த்து, நீதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 97

வரக் கருங் கொண்மூ மழைபொழியாதேல்
மண்பயிர் உயும்வகை உண்டோ?
திரக்கடுங் கவலை சிதைதரப் பல்கால்
செய்யும்விண் ணப்பம்நீ உணர்ந்தும்
இரக்கம் இல்லவள் போல் இருத்தியேல் கருணை
எங்கினி இருப்பது தாயே?
கரக்கரும் வளங்கள் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 98

மாயவ னுயோர் பாதியில் அவளாய்
மற்றொர்பா தியுங்கவர்ந் தனையால்!
நாயகன் மேனி எனின் அவன் வடிவம்
நாடொறும் மறைந்ததாய் இருக்கச்
சேயமண் சத்தி மயம் என(து) அந்தோ,
சிவமயம் என்பதென் உரையாய்?
காயமீ தெழுந்த மதில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 99

பனிபடு நின்தாள் பங்கயம் பொங்கு
பனிவரை அகம் நக நிகழும்
துனிபடு பொழுது பரன்முடி மதியம்
துண்ணெனத் தாக்குநீர் வாவி
நனிபடு முட்டாள் பங்கயம் பெறுமோ?
நவின்றன விணையிலென் றுணர்ந்தேன்!
கனிபடு பொழில்விண் கமழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே! 100

ஸ்ரீ அகிலாண்டநாயகி திருவடிகள் வாழ்க! வாழ்க!

சுபம்!

5A
5-39

With Best Compliments from

Co.

With Pranams to His Holiness

Pattangi PRESS

Quality Printers & Book Binders

★

18, Station Road,
West Mambalam, Madras-600 033
Phone : 425917